மாதர் போதினி

No. 243 மார்ச்சு 1918 **No. 3**

OFFICE OF THE REGISTRAR ... 8-MAR1918 MADRAS

THE POWER OF THE GOSPEL IN INDIA

இந்தியாவில் கிறிஸ்துவின் வல்லபம்

(இதை எழுதினவர் ஓர் இந்து.)

எனக்கு காட்டு இலாக்காவில் வேலை. ஓர் நாள் மலையிலிருந்து இறங்கிவருகையில் எனக்கு எதிரே ஒரு சந்நியாசி ஏறிப்போவதைக் கண்ணுற்றேன். அவருடைய கையில் சில புத்தகங்களும் தோளில் ஒரு போர்வையும் இருந்தது. கதிரவன் கடுமையாய் இருக்கும் நடுப் பகலில் முகமெல்லாம் வியர்வை ஓட அவர் வேகமாய்ச் சென்றார். முந்த அவர் பக்கமாய் நானே போய்ச் சிறிதுநேரம் சம்பாஷிக்கலாமா என்று யோசித்தேன்; பிறகோ அவர் என்னதான் செய்வார் என்றும், எங்கேதான் போவார் என்றும் பார்ப்போமே என்றும் சொல்லிக் கொண்டேன். அவர் ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தார். முகத்தி லுள்ள வியர்வையை துடைத்துக்கொண்டு ஒரு மரக்கட்டையின்பேரில் உட்கார்ந்து,

‘பாவிகளை மீட்கவந்த பரனிவர்தானே’ என்ற கீர்த்தனை பாடினார். வைராக்கியனாகிய ஆரிய சமாஜத்தான் நான். இந்தப் பாட்டைக் கேட் டதும் எனக்கு உண்டான கோபத்துக்கு எல்லை இல்லை. அவர் பிர சங்கம் ஆரம்பித்ததும் அடக்கமுடியாத ஆங்காரம் எனக்குள் உண்டா யிற்று. அதே நேரத்தில் அங்கு கூடிய கும்பினின்று ஒருவன் எழும்பி வந்து ஒரே அடியால் அந்தப் பரிசுத்த சந்நியாசியை வீழ்த்தினான். அவர் முகம் குப்புற விழுந்தார். அதனால் அவர் கையிலும் கன்னத்தி லும் பலமான காயம். அந்த வீரமாமுனிவனே எழுந்து தமது தலைப் பாகைத் துணியால் தமது கையைக் கட்டிக்கொண்டு ஒரு வார்த்தையும் பேசாதிருந்தார். முகத்தினின்று இரத்தம் ஓடவும் கண்களினின்று கண்ணீர் தாரை தாரையாய் வடியவும் அவர் தேவனுக்குப் புகழ்ச்சியாக

ஒரு சந்தோஷ கீதம்பாடி தேவன் எங்களை ஆசீர்வதிக்கும்படியாய் ஜெபித்தார்.

இந்தப் பரிசுத்தனின் கண்ணீர் முத்துக்கள்போல் தரையில் விழுந்தன. அவைகள் வாஸ்தவமான முத்துக்களாகத் தரையினின்று ஒரு நாளிலே வரத்தான் போகிறது. அந்தோ! அப்பேர்ப்பட்ட பக்தனின் கண்ணீரும் உதிரமும் விருதாவாய்ப் போவது சாத்தியமா? ஒருபோதும் அப்படி ஆகாது. ஒருகாலத்தில் ஆரியசமாஜின் அவயமாயிருந்த நான் தூஷணம் மிகுந்த பாழுங்கிணற்றினின்று எடுக்கப்பட்டு ஜீவனைப் பாய்ச்சும் நீரூற்றண்டையில் கொண்டுவரப்பட்டேன். இன்னும் எனக்கு ஞானதீட்சை கிடைக்கவில்லை. சுவாமீ மகாராஜ் (சிம்டார்சிங்) எங்கே இருப்பார் என்று நமக்குத் தெரியாமலிருக்கலாம். ஐயா, முனிவரே, தங்களைக் கீழே தள்ளிய கிர்ப்பாரேன் என்பவன் தங்களைத் தேடிக்கொண்டிருக்கிறான்; என் குரு எங்கே போய்விட்டார் என்று கேட்டுக்கொண்டே இருக்கிறான். அவன் அந்த சாதுவின் காயப்பட்ட கரத்தைக் கொண்டே ஞானஸ்நானம் பெற ஆசித்தான்; சிம்டார்சிங்குவோ சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதேயன்றி ஞானஸ்நானம் கொடுக்கிறதேயில்லை. ஆதலால் அவன் ஜோன்ஸ் ஐயரிடம் ஞானதீட்சை பெற்றுக்கொண்டான். ஆயினும் அந்த முனிவர் முகமுகமாய் அறியாத நூற்றுக்கணக்கான பேர் கிறிஸ்துவண்டை வர அவரே எத்தனமாய் இருந்ததை அவருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆ, கிறிஸ்தவனே, என்னவிதமான கிறிஸ்துவை நீ பாவனை செய்துகொண்டு பின் செல்லுகிறாய்? இங்கே பார்! இதுதான் ஜீவனுள்ள கிறிஸ்துவுக்குப் பின்னே செல்லுதல். ஐசுவரியம் மிகுந்த வியாபாரிகளின் அரண்மனைகளில் படுத்துறங்கி, நாவுக்கிதமானதைச் சாப்பிட்டுச் சோம்பலில் கிடக்கிற இந்து சாதுக்களே இங்கே பாருங்கள்! சரியான சாது இவரல்லவா! தம்முடைய ஜீவனை அவர் வெறுத்து கெபிகளிலும் மலைகளின் குகைகளிலும் காணாமற்போன ஆடுகளைத் தேடிப்போகிறாரே. இருபத்தாறு பிராயத்தில் இந்த உச்சித ஊழியம் உலக ஊதியத்துக்காகச் செய்யப்பட்டதல்ல என்பதை யோசித்துப்பாருங்கள். ஓ கிறிஸ்தவர்களே, இந்துக்களே, முகம்மதியர்களே, இந்தப் பரிசுத்தனின் நேச தோழமையால் பலனடைய உங்களுக்கு இதுவே சமயம். அப்பேர்ப்பட்ட உச்சித இரத்தினங்கள் நெடுநாள் இவ்வுலகில் நிற்கா. ஆயினும் ஐயோ, அப்பேர்ப்பட்ட மணிகள் நம்மைவிட்டுப் போகும் தறுவாயில்தான் நமது கண் திறக்கிறது. அவர்களுடைய ஜீவியகாலத்தில் அவர்களை நாம் எதிர்த்து நீண்ட பிரசங்கம் செய்வதுண்டு. மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து அவனுடைய சகோதரனண்டை வந்தாலும் அவன் நம்பமாட்டான் (லூக். 16, 31) என்ற வாக்கு இவர்களது சத்தியத்தை

ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் பலருக்குமுள்ள கேவல ஸ்திதிக்கு வெகுவாய்ப் பொருந்தும். இந்த பயங்கரமான நிலையினின்று என்னை இரட்சித்து அந்தப் பரிசுத்த குருவின் கூட்டுறவுக்கு என்னை ஒப்புக்கொடுக்கும்படி நான் தேவனைக் கெஞ்சுகிறேன்.

நான் கர்த்தராகிய கிறிஸ்துவிலுள்ள என் விசுவாசத்தைப் பகிரங்கமாய் அறிக்கையிடக்கூடியவனாகும்படி எனக்காக ஜெபியுங்கள்.

WHAT HAST THOU DONE FOR ME?

நீ எனக்காகச் செய்ததென்ன?

இந்தக் கேள்வியை அருமை இரட்சகர் நம்மைப் பார்த்துக் கேட்கிறார். இயேசுவானவர் நமக்காக இப்பூமிக்கு வந்து ஏழைக்கோலமாய் நமது ரூபமெடுத்தார். நம்மைப்போல மனுஷனாய்ப் பூலோகத்தில் நாம் நடக்கவேண்டிய மாதிரியைக் காட்டினார். நமது சகல பாவங்களையும் பரிகரிக்க நமக்காகத் தமது சரீரத்தில் சகல வேதனைகளையும் உத்தரித்து நீசசிலுவையில் மரணமடைந்தார். நமக்காக உயிரோடெழுந்து பரலோகத்துக்கேறி, நல்ல வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுகிறார். என்றென்றைக்கும் நம்மோடு தங்கி, நம்மைச் சுத்திகரித்து பலப்படுத்தி சகல சத்தியத்துக்குள்ளும் நடத்தும் பரிசுத்த ஆவியால் நம்மோடு எப்போதும் வாசஞ்செய்யச் சித்தமாயிருக்கிறார். சகலத்தையும் நமக்காகச் செய்து ஜீவனையுங் கொடுத்த இந்தப் பேரன்பின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் அறிவுக்கெட்டாததே! இந்த அன்பின் மகத்துவத்தை நாம் உணர்ந்தால் அவருக்காக எதைத்தான் செய்யமாட்டோம்! ஓர் தாயின் அன்பை உணராத பிள்ளை தாய்க்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாமலும் அன்புகாட்டாமலு மிருப்பது போல், தாயினும் மிக்க அன்புள்ள ஆண்டவரை மறந்து அவருக்காக ஒன்றுஞ் செய்யாதிருப்போர் பலருண்டு.

கர்த்தர் நமக்குச் செய்த உபகாரங்களுக்காக நாம் அவருக்கு என்னத்தைச் செலுத்துவோம்? இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துப் போற்றுவேன் என்று சங்கீதக்காரன் சொன்னவண்ணம் அவரது இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு பிறருக்குக் கூறி அறிவிப்போமாக. இச்சிறியருக்குச் செய்ததை எனக்கே செய்தீர்களென்று நம் இரட்சகர் சொல்வாராதலால், நம்மாலியன்றவரைக்கும் நம்மைச் சுற்றிலுமுள்ள அயலாருக்கு ஊழியஞ் செய்வோமாக. நாம் பிறருக்குச் செய்யும் ஊழியம் கிறிஸ்துவுக்குச் செய்வதேயாகும்.

இவள் தன்னாலியன்றதைச் செய்தாளென்று உன்னைப்பற்றிச் சொல்லப்படத்தக்கதாய்க் கூடியமட்டும் சமயம் வாய்த்தாலும் வாய்க்கா விட்டாலும், உன் ஜீவியத்தாலும், ஜெபத்தாலும், சுவிசேஷத்தைப் போதிப்பதாலும்,. பிறருக்குவேண்டிய ஒத்தாசை செய்வதாலும் உன்னை மீட்ட ஆண்டவருக்காக ஊழியஞ்செய்.

CHILDREN'S PAGE

பாலர் பக்கம்

ஒரு பெரிய தடை

பிரியமான பிள்ளைகளே, உங்களில் அநேகர் தந்திக்கம்பிகளைப் பார்த்திருப்பீர்கள், அவைகளின் வழியாய் வெகு லேசாயும் சீக்கிரமாயும் செய்திகள் அனுப்பலாம் என்றும் கேள்விப்பட்டிருப்பீர்கள். மின்சாரம் என்கிற ஓர் சத்து ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் செல்லுகிறதினால்தான் தந்திச்சமாசாரங்கள் அனுப்பக்கூடியதாயிருக்கின்றன. இந்த மின்சாரம் கம்பிகளின் வழியாய் லேசாய்ச் செல்லும். அதினால்தான் தந்தி ஆபீசுகளுக்கிடையில் கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன. கம்பிகள் வழியாய் மின்சாரம் செல்லுகிறதுபோல அது தண்ணீர் வழியாயும் செல்லுமாதலால் நனைந்த பொருள்களின் வழியாயும் செல்லும்.

ஒருதடவை ஜப்பான் தேசத்திலே இருந்த ஒரு துரை ஒரு செய்தி அனுப்பும்படி ஆபீசுக்குப் போனார். ஆனால் தந்திக்கம்பிகளில் ஏதோ சேதம் நேரிட்டு பதில் செய்தி வரவில்லை. அதின் காரணத்தைக் கண்டுபிடிக்கும்படி ஆள் அனுப்பினார்கள். கொஞ்சநேரத்துக்குள் காரணம் கண்டுபிடிக்கப்பட்டது. என்னவென்றால், ஓர் வகையான பெரிய சிலந்திப்பூச்சிகள் தந்திக்கம்பிகளிலிருந்து தரைமட்டும் வலைகளைப் பின்னிவிட்டிருந்தன. முந்தினநாள் இரவில் பெருமழை பெய்து அந்த சிலந்திப்பூச்சி வலைகள் நனைந்துபோனபடியால் அவைகளின் வழியாய் மின்சாரம் தரைக்குள் ஓடிவிட்டது. ஆகையால் செய்திகள் தடைபட்டன. உடனே அந்த வலைகளை எடுத்துவிடும்படி ஆள்களை அனுப்பினார்கள். அதின்பின்பு கம்பியின் வழியாய்ச் செய்திகள் தாராளமாய்ப் போனது.

பிரியமான பாலிய சிநேகிதரே, நாமும் பரலோகத்திலிருக்கிற நமது பிதாவுக்குத் தினந்தோறும் ஜெபமாகிய தந்தியின் மூலமாய்ச் செய்திகள் அனுப்புகிறோம். ஆனால் நாம் கேட்கிற காரியங்களைப்

பெற்றுக்கொள்ளுகிறதில்லை. காரணம் என்ன? நமது ஜெபம் பரம பிதாவின் சமுகத்தில் போய்ச் சேரவில்லை. நமது பாவங்கள், நனைந்து போன சிலந்திப்பூச்சி வலைகளைப்போல நமது ஜெபங்களைத் தடுத்துக் கொள்ளுகின்றன. உன் ஜெபம் கேட்கப்படவேண்டுமானால் நீ கர்த்தருடைய பிள்ளையாய் நடந்துவா, உனக்கும் தேவனுக்கும் இடையில் பாவம் குடிகொள்ளாதபடி எச்சரிக்கையாயிரு. மேலும் ஒவ்வொரு நாளும் கர்த்தரை நோக்கி, 'கர்த்தாவே, மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்' என்று ஜெபித்துவருவாயாக.

ஓர் தாயின் ஜெபத்தினால் விடுதலையாக்கப்பட்ட மகன்

சீனாவிலுள்ள ஒரு கிராமத்தில் போலீஸ் சேவகன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவி புத்தமார்க்கத்திலிருந்தும், அதில் சந்தோஷமில்லை என்று கண்டு, அநேக யாத்திரைகள் செய்தும் திருப்தி இல்லாமல், ரோமான் மார்க்கத்துக் கோவிலுக்கும் போனாள். அங்கு 'செய் செய்' என்றே அநேக கட்டளைகள் கொடுக்கப்பட்டது. அது அவளுக்குக் கூடாத காரியமாய் இருந்தது.

இப்படி இவள் விசனமாய் இருக்கும்போது பக்கத்தில் 8 மைலுக்கு அப்பாலுள்ள ஒரு ஊரில் இயேசுவின் போதகத்தை சில அந்நிய பேய்கள் பிரசங்கிக்கிறார்களென்று ஜனங்கள் பேசிக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு, அந்த இடத்திற்கே போய்ச்சேர்ந்தாள். அங்கு செய்யப்பட்ட போதகத்தைக் கவனித்துக் கேட்டபோது, அது அவளுக்கு அதிகப் புதிதாக இருந்தது. அதென்னவென்றால், 'நம்முடைய கிரியை நமக்கு உதவிசெய்யாது, நமக்கு அவசியமானவை எல்லாம் செய்யப்பட்டாயிற்று, எந்த நற்கிரியையும் நம்மை தேவனிடம் கொண்டுபோகாது; இயேசுகிறிஸ்து நமக்காகச் செய்துமுடித்த வேலையை நாம் நம்பவேண்டும்' என்று பிரசங்கிக்கப்பட்டது.

இவ்வார்த்தைகள் அவளுடைய இருதயத்தில் அதிசயமான அசைவை உண்டாக்கினது. திரும்ப வீட்டிற்குப்போய் அதிக சந்தோஷமாய் இருந்தாள். கொஞ்சநாளுக்குப்பின் ஒரு கொலை நேரிட்டது. ஆனால் அது யாராலென்று கண்டுபிடிக்கப்படவில்லை. குற்றவாளியைக் கண்டுபிடியாவிட்டால் சீனாவிலுள்ள பிரமாணத்தின்படி அந்த போலீஸ் சேவகன் தண்டிக்கப்படவேண்டியது. ஆனால் நியாயாதிபதி அவன் வயதுசென்றவனாய் இருந்தபடியால் அவனுடைய ஜீவன் கொல்லப்பட்டவனுடைய ஜீவனுக்கு ஈடாகாது என்று சொல்லி அவனைக் கொலைசெய்தவனைத் தேடிவரும்படி செய்து அவனுக்குப் பதிலாக அவன் ஒரே மகனைக் கைதியாக்கினார்கள்.

தாய் அதிக விசனத்தோடு தான் முன் பார்த்த போதகரிடம் போய்ச் சங்கதியைச் சொன்னாள். அப்பொழுது போதகர், 'அம்மா, நாம் இவ்வுலகத்து மனிதரிடம் நோய்ப் பேச ஏலாது, ஆனால் கடவுளை நோக்கி ஜெபிப்போம். அவர் மனிதருடைய இருதயங்களை மாற்றுவார்' என்று சொன்னார்.

அப்பொழுது, 'எனக்கு எப்படி ஜெபிக்கவேண்டும் என்று தெரியாது' என்று அந்த ஏழை மனுஷி சொன்னாள். அதைக்கேட்டு அவர், அவளுக்கு ஜெபிக்கச் சொல்லிக்கொடுத்து, தானும் ஊக்கமாய் ஜெபித்து, 'இனிமேல் சந்தோஷமாய் போ, நீ உன் கஷ்டங்களை எல்லாம் தேவன்மேல் போட்டுவிட்டாய், உன் மகன் சீக்கிரமாய் விடுதலையாவான்' என்றார்.

'நான் என் கவலைகளையெல்லாம் கடவுளினிடம் போட்டேன். என் மகன் சீக்கிரமாய் வருவான்' என்று அவள் சொன்னபோது, ஜனங்கள் சிரித்துக்கொண்டு அவளைக் கேலிபண்ணினார்கள். ஆனால் ஜெபத்தைக் கேட்கிற தேவனுடைய ஆச்சரியமான செயலினால், அவள் விசுவாசத்தின்படி மகன் விடுதலைபெற்று வீட்டிற்கு வந்துவிட்டான். முன் அவளைப் பரிகாசம்பண்ணினவர்கள் யாவரும் ஆச்சரியப்பட்டு ஜெபத்தின் வல்லமையைக் கண்டுணர்ந்து சத்தியமார்க்கத்தில் சேர்ந்து மெய்க்கிறிஸ்தவர்களானார்கள்.

'நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.' யாக். 5 : 16.

பெப்ருவரி மாத வேதவிடுகதைகளுக்கு விடை

1. சாமுவேல். 2. ஈசாக்கு. 3. (1) யெப்தா ; (2) ஆமான்.

A FAREWELL

கடைசி வழியனுப்புதல்

இந்தப் புது வருஷத்தில் என்னுடைய பிள்ளைகளில் இரண்டுபேர் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தார்கள். ஒரு பிள்ளைக்கு ஒன்றரை [illegible], பெயர் எபெநேசர் சூலியாள். மற்ற பிள்ளை கு[illegible]யாள் செல்லமணி; வயது நாலு. ட, ப, ம, மரம், படம், வண்டி என்று எழுதவும் படிக்கவும் தெரியும். ஞானப்பாட்டுகளில், 'கடல் கொந்தளித்து,' 'நீங்காதிரும்,' 'நான் தூதனாகவேண்டும்,' 'துள்ளி துள்ளி பாலரே' என்ற பாட்டுகளும் கீர்த்தனைகளும் சேர்ந்து 25-க்கு மேலானபாட்டுகள் கின்னரத்

துடன் பாடுவாள். ஓய்வுநாட்களில் காணிக்கையுடன் கோவிலுக்குப் போவாள். கோவிலில் அமைதியாய் உட்கார்ந்து பாட்டுப்பாடி ஆராதனையைக் கவனிப்பாள். ஜனுவரி மாசம் 10-ந் தேதி காய்ச்சல்கண்டு படுக்கையிலிருந்தாள். தன்னைப் பார்க்கவரும் ஆட்களிடம் ஜெபம் பண்ணுங்கள் என்று கேட்பாள். வியாதிமுற்றி மரணநிலைமைக் குட்பட்டு ஆவிபிரியும்வரை திட்டமாயும் தெளிவாயும் பேசினாள். ஆவி பிரிய 20 நிமிஷத்திற்குமுன் நானும் என் மற்ற பிள்ளைகளும் படுக்கையைச்சுற்றி இருந்தோம். தன் அக்காள் லில்லியைக் கூப்பிட்டு, அக்கா, 'கடல் கொந்தளித்து' என்ற பாட்டைப் பாடு என்றாள். உடனே பிள்ளைகள் துயரக்குரலோடு பாடினார்கள். ஒரு சரணம் பாடவும், போதும் என்று சொல்லி, 'பின்னால் வருகிறேன், பின்னால் வருகிறேன், பின்னால் வருகிறேன்' என்றாள். அப்போது நான், 'குளோரி, மோட்சம் போகிறாயா? இயேசுவானவர் உன்னை அழைக்கிறாரா?' என்றேன். 'ஆம்' என்றாள். அதன்பின் 'என்னை இழுக்காதே' என்று மூன்றுதரம் சொல்லி, அப்பா என்று தகப்பனாரைக் கூப்பிட்டு, அப்பா என்று மேலே காட்டி, சிரித்த முகமாயிருந்தாள். உடனே நான், 'குளோரி, நீ சந்தோஷமாய் மோட்சம் போ. அங்கே இயேசுவானவர் உனக்கு வெண்வஸ்திரம், வாடாத முடி, கின்னரம் கொடுப்பார். அங்கே ஜூலியாளுடன் சந்தோஷமாயிரு. நானும் அப்பாவும் சீக்கிரம் வருவோம்' என்று சொல்லி கட்டிபிடித்து முத்தியிட்டேன். 'ஆம்' என்று சந்தோஷமுகத்துடன் சொன்னாள். பிள்ளைகளைக் கூப்பிட்டு, 'தங்கை குளோரியை மோட்சத்திற்கு வழி அனுப்புங்கள்' என்று சொன்னேன். அந்த சமயம் ஒன்பது பிள்ளைகள் படுக்கையைச் சூழ நின்றார்கள். எல்லாரும் அழுகைசத்தத்துடன், 'குளோரி அம்மா, மோட்சம் போகிறாயா, போ' என்றார்கள். உடனே பிள்ளையைக் கையில் எடுத்தேன். ஜெபித்தவண்ணமாய் கைகளைச்சேர்த்து கண்கள் மேலே பார்த்த வண்ணம் ஆவிபிரிந்தது. அதன்பின் படுக்கையில் கிடத்திவிட்டு பிள்ளைகளை 'மேலோகத்தை நாடுகிறோம்' என்ற பாட்டை பாடச்சொன்னேன். பிள்ளைகள் பாடினார்கள். அவர்கள் தகப்பனார் ஒவ்வொரு சரணத்தையும் விளக்கிக்காட்டி, எப்படி மோட்சம் போகிறதென்றும், அநேகம் பிள்ளைகள் மோட்சத்திலிருக்கிறதையும், அங்கே போனால் எப்படி இருப்போம் என்பதையும் சொல்லி ஜெபித்தார்.

பிள்ளைகளே, நீங்களும் இப்படித்தான் மோட்சம் போகவேண்டும். என் பிள்ளை மோட்சம்போக நான் அதிகமாய் ஆசைப்பட்டேன்; நானும் என் பிள்ளையைப் பார்ப்பேன். சகோதரிகளே, உங்கள் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள். வேதத்தில் அநேக முக்கிய சரித்திரங்களைப் படித்துக்கொடுத்தேன். நமது பிள்ளை கர்த்தாண்டை இருப்பது நமக்கு

எவ்வளவு சந்தோஷம்! இது அநேக சகோதரிகளான தாய்மாருக்கும் பிள்ளைகளுக்கும் போதனையாயிருக்கும் என்று நம்பி எழுதுகிறேன்.

உங்கள் பிரிய சகோதரி

P. ஞானபரணம் டாசன்,

சேந்தமங்கலம், நாமக்கல் தாலுகா.

A SOLITARY WAY

அவாந்தர வழி

மனுஷீக இருதயத்தின் தன்மையில் ரகசியம் ஒன்றுண்டு. அதாவது, நம்மைச்சூழ நமக்கு அருமையும் உரிமையுமான எண்ணிறந்த பேர்கள் இருந்தாலும் சமயாசமயங்களில் ஒவ்வொரு இருதயத்திற்கும் ஒருவிதமான சோர்பு உண்டாகிறது. அப்போ நாம் யாருமற்ற அகதிகள் என்றும் தனியாய் விடப்பட்டவர்களென்றும் எண்ணுகிறோம். நம்முடைய நேச தோழருங்கூட சில நேரங்களில் நம்முடைய இருதயத்தின் இன்பதுன்பங்களை கிரகிக்கக்கூடாமலிருக்கிறார்கள். 'என் மனதின் எல்லா அந்தரங்க உணர்ச்சியையும் நுட்பமாய் அறியத்தக்கவன் ஒருவனுகிலுமில்லை' என்று ஒரு பக்தன் சொல்லுகிறார்.

இந்த நிலைமை இடைக்கிடையே பலதரம் நம்மொவ்வொருவருக்கும் வருகிறது. நாம் எங்கிருந்தபோதிலும், நம்முடைய சந்தோஷமும் பாக்கியமும் எவ்வளவு ரம்மியமாயிருந்தாலும் நம்முடைய ஜீவியத்தில் ஒருவரும் அறியாத ஒரு தனித்துவிடப்படும் சமயம் நமக்குண்டு. அச்சமயம் நம் அங்கலாய்ப்பான நிலைமையை அறிந்து உதவக்கூடிய யாருமில்லையே என்று நினைப்போம். இதன் காரணம் என்னவென்றால் நம்முடைய அருமை ரட்சகர் நம்முடைய அன்பை விரும்புவதேயாம். ஒவ்வொரு இருதயத்திலும் அவருக்கே முதல் இடம் இருக்க வேண்டுமென்ற விருப்பத்தோடு அவர் ஓர் ரகசிய திறவுகோலை வைத்துக் கொண்டிருக்கிறார். நம் இருதயத்தின் எல்லா உள் அறைகளையும் திறந்து தம்மிடத்தில் வரும் ஒவ்வொரு ஆத்துமாவையும் தம்முடைய பூரண உருக்கத்தாலும் சுத்த சமாதானத்தாலும் ஆசீர்வதிக்கும்படி ஆவலுள்ளவராயிருக்கிறார். ஆகையால் நமக்கு இப்பேர்ப்பட்ட தனித்துவிடப்படும் நேரங்கள் வரும்போது அதுதான் ரட்சகர் 'என்னிடத்தில் வா' என்றழைக்கும் சத்தம்.

மனிதர் நம்மைப்பற்றித் தப்பெண்ணம் கொள்ளும்போது மறுபடியும் இரட்சகரின் அழைப்பின் சத்தம் கேட்கிறது. இயேசுகிறிஸ்து

ஒருவரே நம்முடைய ஆத்துமாவை திருப்திசெய்ய வல்லவர்; அவரோடு நடப்பவர்கள் ஒருக்காலும் தனியாய் விடப்படமாட்டார்கள்.

உன்னால் தாங்கக்கூடாத துன்பத்தில் உழன்று தவிக்கும்போது, 'ஐயோ, இந்த பாரத்தைத் தாங்கமுடியவில்லையே!' என்று கதறுகிறாய். ஆம், உண்மையாகவே சில பாரங்கள் நீ தனியாய்ச் சுமக்கக்கூடாதவைகளாய் உன்மேல் விழும். இரட்சகருடைய உதவிக்காக நீ ஓடவேண்டுமென்று உன்னோடு பாரஞ்சுமக்க ஆவல்கொண்டவராய் தம் திருவுள்ளச் சித்தத்தால் அதை அவ்வளவு பளுவாக்குகிறார்.

உன் அந்தரங்க துன்பத்தில் ரட்சகரின் அழைப்பின் சத்தத்தைக் கேட்கிறாய். துக்கம் நிறைந்தவராயிருந்த நம் ஆண்டவர் சோதனை சகித்தவராகையால் உன்னோடு பரிதபித்து உன்னைக் கிருபையால் தேற்றி நடத்துவார். அவரோடு தினம் நடப்பவர்களுக்குத் தனிவழி கிடையாது.

அவாந்தர வழி

அவர்கள் தாபரிக்கும் ஊரைக் காணமல் வனாந்தரத்திலே அவாந்தர வழியாய் அலைந்துதிரிந்தார்கள்.

தாபரிக்கும் ஊருக்குப் போய்ச்சேர அவர்களைச் செவ்வையான வழியிலே நடத்தினார்.

தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி பசியுள்ள ஆத்துமாவை நன்மையால் நிரப்புகிறார். சங். 108: 4, 7, 8.

அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து ஆசீர்வதித்தேன். ஏசா. 51: 2.

அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய் அங்கே ஜெபம்பண்ணினார். மாற். 1: 35.

WORK FOR CHRIST

கிறிஸ்துவுக்காக உழைத்தல்

(தொடர்ச்சி)

ஒருவிதமாய் பிரயோஜனமில்லை என்று எண்ணுகிற ஊழியம் இன்னொருவிதமாய் ஆசீர்வாதத்தை விளைவிக்கிறது. திருஷ்டாந்தமாகப் பின்வரும் சங்கதியை எடுத்துக்கூறலாம்: ஒரு ஓய்வுநாள் பள்ளிக்கூடத்தில் கற்பித்துவந்த ஒரு பக்தியுள்ள துரைசானி, தன் வகுப்பில் சேர்ந்திருந்த ஒரு வாலிபன் வியாதிப்படுக்கையில் இருக்கையில் பல மாதங்களாய் அவனைச் சந்திக்கும்படி போய்வந்தாள்.



அவள் அவன் படுக்கையண்டையில் வேதம் வாசித்து, இனிய பாட்டுப்பாடி ஜெபித்துவிட்டுப் போவாள். அவன் கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவனல்ல. ஆனால் தன் பிரயாசத்தால் அவன் கிறிஸ்துவண்டைக்கு நடத்தப்படுவான் என்று நம்பியிருந்தாள். கடைசியாய் ரோகம் சுகப்பட்டது. ஆனால் சிறிதும் மாற்றம் இல்லை. முன்னை விட மார்க்க காரியத்தில் நிர்விசாரியாய் நடக்கத் தொடங்கினான். உத்தமமாய் செய்த இந்த ஸ்திரீயின் ஊழியம் பயனற்றதாய்க் காணப்பட்டது.

பிற்பாடு அந்தக் கவலையற்ற வாலிபனுக்காக எடுக்கப்பட்ட பிரயத்தனம் இன்னொருவிதமாய் அநுகூலப்பட்டதாய் அறிந்தாள். அடுத்த அறையில் வியாதிபிடித்த ஒரு மெலிந்த பெண் இருந்தாள். அந்த வாலிபனுக்காக எடுத்த பிரயாசம் அந்தப் பெண்பிள்ளைக்கு உபகாரப்பட்டது. அவள் கிறிஸ்துவண்டைக்கு நடத்தப்பட்டாள். வாலிபனின் கட்டிலண்டை பாடப்பட்ட ஞானப்பாட்டுகள் அவன் இருதயத்தில் பலிதப்படாமற்போனபோதிலும், அடுத்த அறையிலிருந்த பெண்பிள்ளை அதைக் கவனமாய்க் கேட்டு கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து இரட்சிக்கப்பட ஏதுவாயிற்று.

இவ்விதமாகவே ஒருவருக்காகச் செய்யப்பட்ட கிறிஸ்தவ ஊழியம் மற்றவர்களுக்குப் பிரயோஜனப்பட்டதாய் பல உதாரணங்கள்

உண்டு. கடைசிநாளில் அறப்புக்காலத்தில் நாம் செய்த கிரியைகளுக்கும் பேசின வார்த்தைகளுக்கும் உள்ள பலனை அறியும்வரையில் நாம் செய்த நற்கிரியைகள் பயனில்லாமற்போயின என்று சொல்லலாகாது.

அநேக ஜனங்கள் தங்கள் மரணபரியந்தம் தங்கள் உழைப்பின் பலனைக் காணாமற்போகிறார்கள். ஆனால் அவர்கள் மோட்சவாசலில் பிரவேசிக்கையில் தங்களுடைய வேலை அங்கே நடந்துவந்ததாகவும் பூலோகத்தில் பிரயோஜனமற்றதாய்க் காணப்பட்ட ஊழியத்திற்கு மகிமையான பலாபலன் முத்துவாசலுக்குள் இருப்பதாகவும் கண்டு கொள்ளுவார்கள்.

நாம் செய்கிறதான ஊழியத்தின் பலன் எழுதப்படாமற்போக நேரிட்டாலும் அந்த ஊழியத்தை நிறைவேற்றுதலானது நமது சொந்த ஜீவியத்தில் பிரயோஜனத்தை விளைவிக்கிறது. 'தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் என்றும் நிலைத்திருக்கிறான்' என்று சத்தியவேதம் சொல்லுகிறது. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதினால் நமக்கு அழிந்துபோகாத கீர்த்தி உண்டாகிறது. கீழ்ப்படிதலினால் ஆத்துமாவுக்கு அலங்காரம் உண்டாகிறது. கிறிஸ்துவின் நாமத்தில் செய்கிற எந்த உண்மையான ஊழியமும் நமது ஜீவியத்தில்தானே மாற்றத்தை உண்டுபண்ணுகிறது. நாம் சுயநயம் கருதாமல் கிறிஸ்துவுக்காக செய்யும் ஒவ்வொரு ஊழியமும் மற்ற ஆத்துமாக்களுக்கு நன்மை தராவிட்டாலும் நமக்குத்தானே உள்ளத்தில் நிலவரமான ஆசீர்வாதத்தை விளைவிக்கிறதாயிருக்கிறது.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன்னே ஒரு இலை மிருதுவான களிமண்ணின்மேல் விழுந்தது. அது இல்லாமற்போனதாக எண்ணப்பட்டது. ஆனால் கடந்த வேனிற்காலத்தில் ஒரு புவன கோள சாஸ்திரி (Geologist) ஒரு கல்லைச் சுத்தியலால் உடைத்துப் பார்க்கையில் அதில் அவ்விலையின் வடிவம் முற்றும் காணப்பட்டது. அதின் ரேகைகளும் கோடுகளும் நரம்புகளும் அழியாமல் பலநூற்றாண்டுகளாய் அதில் பாதுகாக்கப்பட்டிருந்தன. அப்படியே இன்று நாம் கிறிஸ்துவுக்காகச் செலவிடுகிற வார்த்தைகளும் ஊழியங்களும் காணப்படாமற்போனதுபோல் தோன்றினாலும், கடைசிதினத்தில் அவற்றில் அற்பமானவைதானும் கிறிஸ்துவின் மகிமைக்காகவும், நிறைவேற்றினோரின் பலாபலனுக்காகவும் பிரத்தியட்சமாய் விளங்கும் என்பது திண்ணம்.

THE SHADOWS WE CAST

நாம் பதிக்கும் நிழல்

(தொடர்ச்சி)

சிறந்த ஜீவியத்தை ஞாபகப்படுத்தல் ஒரு ஆசீர்வாதம்தான். அவர்களுடைய மாணத்தால் உண்டான துக்கம் அச்சீவியத்தின் தன்மையை உணர்த்துகிறதாயும் பூர்த்தியாக்குகிறதாயும் காணப்படும். களங்கமற்ற ஜீவியங் கழித்தவர்களைக்குறித்த ஞாபகம் ஒருவிதமாய்ச் சொல்லப்போனால் அவர்களுடைய ஆயுள்காலத்தைவிட அன்புக்குரியதாய்க் காணப்படும். மாணமானது நமது அன்புக்குரியவர்களை மறுரூபப்படுத்துகின்றது. அவர்கள் ஜீவியத்தின் மாசு கறைகளை அது அகற்றி அவர்களில் இருந்த பரிசுத்தம், அன்பு, சத்தியம் முதலான சிறந்த லட்சணங்களைத் தெளிவாக்குகிறது. தங்கள் பருவகாலங்களில் நாம் அவர்களோடு பிரியாத சிநேகத்தோடிருக்கையில் பூலோக ஜீவியங்களின் வருத்தங்களிலும் கலகங்களிலும் பிரவேசித்துத் தங்கள் ஓட்டத்தை முடிக்கிற சிநேகிதர் உண்டு. கார்டினல் நியூமன் (Cardinal Newman) என்பவர் எழுதுகிறபடி :

'ஜீவனை இழக்கிறவன் நமக்காய் ஜீவிக்கிறான்
ஆனால் ஜீவிப்பவனை நாம் இழக்கிறோம்' என்பது சத்தியம்.

இவ்வண்ணமாய் சாவு நல்மனிதனின் செல்வாக்கை அழித்துப் போடுகிறதில்லை. ஜீவன் பிரிந்து பலகாலத்திற்குப் பின்னும் அந்த ஜீவியம் மற்றவர்களுக்கு நன்மையையே விளைவித்துக்கொண்டிருக்கிறது.

செல்வாக்கு எப்போதும் நன்மையானதாயிருக்கிறதில்லை என்பதையும் மறந்துவிடக்கூடாது. தீயசெய்கைகளும் துர்மாதிரியைப் பின்வைக்கின்றன. துஷ்டமனிதர் அவர்கள் கழிந்துபோனதின் பின்னும் ஜீவித்திருக்கிறார்கள். தீமையையே மற்றவர்களுக்கு விளைவித்துக்கொண்டிருந்த ஒரு மனிதன் தன் மாணப்படுக்கையில், 'என்னுடைய செல்வாக்கை எல்லாம் சேர்ந்து என்னை அடக்கம் செய்கிற குழியிலே அதையும் புதைத்துவிடுங்கள்' என்று உரப்பாய்க் கூறினான். ஆனால் மனஸ்தாபத்தோடு கூடிய புத்தியில்லாத அவனுடைய விருப்பம் நிறைவேறாமற்போயிற்று. அம்மனிதன் இவ்வுலகத்தை விட்டுப்பிரிந்தும் அவன் செல்வாக்கு பின்னிடப்பட்டதாய் அநேகருடைய ஜீவியத்தில் பல்லாண்டுகளாய் விஷத்தைப் பிறப்பித்துக்கொண்டிருந்தது.

ஆகையால் நாம் எவ்வித செல்வாக்கைப் பின்வைத்துப்போகி றோம் என்பதைக்குறித்து மிகுந்த கவனமாயிருக்கவேண்டியது. தொற்றுவியாதி நிறைந்த ஒரு வஸ்திரத்தைத் தெருவீதியில் எறிகி றது ஒரு பெரிய குற்றம். அது மனுஷ இல்லிடங்களில் வியாதியைப் பரப்பக்கூடியது. நல்லொழுக்கத்தைத் தவிர்க்கிறதான விஷம் நிறைந்த வார்த்தைகள் அடங்கின புஸ்தகத்தை அச்சடித்து அனுப்பு கிறது அதைவிடப் பெரிய குற்றம். மாசற்ற ஜீவியத்தை அசுத்தப் படுத்தி எங்கும் பாம்புகிறதான விஷத்தன்மையுள்ள புஸ்தகங்களை எழுதி அச்சடிக்கிறவர்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்க பலனை அடைய தேவனுடைய நியாயாசனத்தண்டை நிற்கும்போது பயங் கரமான தண்டனை அடையவேண்டிவரும். நாம் நம்முடைய ஜீவி யத்தைக் கடவுளுக்குகந்த பிரகாரமாகவும் பூலோகத்துக்கு ஆசீர்வாத மானபடியும் கொண்டுநடத்த வேண்டுமானல் நாம் செய்கிற ஒவ் வொரு காரியமும் மற்றவர்களுக்குச் சற்றேனும் தீமையை உண்டாக் கக்கூடியதாய் இராதபடி இருக்கப் பிரயாசப்படவேண்டும்.

மிகவும் திறமையும் பக்தியுமுள்ள ஒரு வாலிப ஓவியன் ஒரு தரம் அமெரிக்காவிலிருந்து லண்டன் பட்டணத்துக்குப் போயிருந் தான். அவன் ஏழையாயிருந்தும் உத்தம ஜீவியம் செய்யவும் அழ கான சித்திரம் வரையவும் ஆவலுடையவனுயிருந்தான். அவன் வரைந்த சித்திரங்களில் ஒன்று பரிசுத்த அழகு பொருந்தியதாயிருந் தும், சிற்றின்ப சிந்தையுடையவர்கள் தகாதவிதமாய் தீமையானபடி அர்த்தப்படுத்தக்கூடியதாயிருந்தது. படத்தில் விருப்பமுள்ள ஒரு வன் அதை விலைகொடுத்து வாங்கினுன். அது ஓவியனின் கையை விட்டுப் போனபின் அவன் யோசித்துப்பார்த்து, அப்படம் அறி வில்லாதவர்களுக்குத் தீமையைப் பிறப்பிக்கக்கூடியதாயிருக்குமோ என்று அங்கலாய்க்கலானுன். ஆகவே அவன் படத்தை வாங்கின ஆளிடம் சென்று தனக்கு அப்படத்தைத் திரும்ப விலைக்குக் கொடுக் கும்படி கேட்டான். வாங்கினவனுக்கு ஓவியனின் அர்த்தம் விளங்க வில்லை. 'நான் உனக்குச் சரியான விலை தரவில்லையா? உனக்கு அதிக பணம் வேண்டுமோ?' என்று அவன் கேட்டான். அதற்கு ஓவியன் பிரதியுத்தரமாக, 'நான் ஏழை. என் வித்தை எனக்கு ஜீவன். அது செல்லுமிடத்தில் நன்மைசெய்கிறதாய் இருக்கவேண்டும். ஒரு வேளை இந்தப் படத்தால் தீமை விளையக்கூடும். அப்படியானல் உல கத்தாருக்குமுன் நான் நிர்ப்பாக்கியனுயிருப்பேன், ஆகையால் திரும் பக் கேட்கிறேன்' என்றுன்.

நாம் உபயோகிக்கிற வார்த்தைகளும், நாம் செய்கிற கிரியைகளும் நமது கருத்துக்கும் காரியத்துக்கும் ஒத்திருந்தால்மாத்திரம் போதாது.

மற்றவர்களுக்குள் அது என்ன உணர்வைப் பிறப்பிக்குமோ என்பதைக்குறித்தும் நாம் கவலையுடையவர்களாய் இருக்கவேண்டும். நாம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சுயாதீனத்தினுல் அபாயங்களில் அகப்படாமலிருக்கலாம். ஆனுல் அப்பேர்ப்பட்ட சுயாதீனம், தங்களில் ஸ்திரம் குறைந்தவர்களுக்கும், தங்களை சூட்சிக்கிறவர்களான ஆட்கள் இல்லாதவர்களுக்கும் மோசத்தை விளைவிக்கிறதாயிருக்கும். ஆதலால் இப்படிப்பட்ட பலவீனரைக்குறித்தும், அப்பேர்ப்பட்டவர்களுக்கு முன்பாய் நாம் எவ்விதமாய் நடந்துகொள்ளுகிறேம் என்றும் கவனிப்பது நமது கடமை. நமக்கிருக்கிற சுயாதீன செய்கைகள் மற்றவர்களுக்குத் தீமையைப் பிறப்பிக்க ஏதுவாயிருக்குமேயாயின் நாம் நமது சுயாதீனத்தை அகற்றிவைக்கவும் சம்மதமுடையவர்களாயிருக்கவேண்டியது. பவுல் அப்போஸ்தலன் 'மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்' என்று போதிக்கிருர்.

நாம் நம்முடைய முன்மாதிரி ஆசீர்வாதமானதாயிருக்கிறதென்று எப்படி நிச்சயமாயறியக்கூடும். இது நமது ஜீவியத்தைப் பரிசுத்தமும் நன்மை நிறைந்ததுமாய் வைத்துக்கொள்ளுவதினுலல்லாமல் வேறல்ல. தேவனுடைய ஆவியும் கிறிஸ்துவின் அன்பும் நமக்குள் நிறைந்திருக்கும் அளவுக்குத்தக்கதாகவே நமது செல்வாக்கும் பரிசுத்தமானதாயோ உலகத்துக்கு ஆசீர்வாதமானதாயோ இருக்கும்.

PENITENCE AND CONFESSION

பாவ அறிக்கை

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி

ஏசையா ஏழையடியேனைப் பாரும்—ஏசையா.

சரணங்கள்

1

மோசம் போக்கும் மாய்கையில் பாசம் வைத்தே யுழன்றேன்
நேசம் மிகுந்த தேவே தாசன் அங்கலாய்க்கிறேன்— ஏசையா

2

அகந்தை ஆங்காரம் ஆசை அகற்றி ஆலயமாக்கி
உகந்த உண்மை உற்சாகம் ஊக்கம் உறுதிதானும்— ஏசையா

3

பாவியான் செய்தவினை மேவித் திருக்கண் வைத்து
தாவி உம்மையே நாட ஆவியாலே ஆட்கொள்ளும்— ஏசையா

4

நிர்ப்பாக்யனான பாவி நற்பாக்யந் தேடி வாறேன்
அற்பனை அன்பா நீரே ஓர்க்காலுந் தள்ளிடீரே— ஏசையா

SOME USEFUL HINTS

சில உபயோகமான குறிப்புகள்

1. காலையிற் செய்வதுபோலவே படுக்கைக்குப் போகுமுன் கை கால் முகங் கழுவி பல் விளக்குவது நல்லது.

2. படுக்குமுன் வஸ்திரமும் தலைமயிரும் இறுக்கமின்றி தளர்த்தியாயிருக்கப் பார்க்கவேண்டும். பகலில் உடுத்த உடையோடு தூங்காமல் வஸ்திரம் மாற்றிப் படுப்பது சுகத்துக்கேற்றது.

3. சாப்பாட்டுக்குப்பின் வாய் கொப்பளிப்பது பற்களை வெகு காலத்திற்குக் காப்பாற்றும்.

4. ஸ்நானஞ் செய்யும்போது முரட்டுத்துண்டு, முற்றின பீர்க்கங்காய்ப் பஞ்சு அல்லது மற்ற பஞ்சில் சோப்பு தடவி உடம்பில் தேய்த்தால் தோலிலுள்ள வியர்வைத் துவாரங்கள் திறந்து சுசியும் ஆரோக்யமுமுண்டாகும்.

5. மெலிந்து பெலவீனமான பிள்ளைகளுக்குத் தேங்காயெண்ணெயைச் சுடவைத்து உடம்பில் தேய்ப்பது நல்லது. ஜலதோஷம், இருமல், ஜுரம் இருக்கும்போது எண்ணெயில் கற்பூரம் சேர்த்துக் கொள்ளலாம்.

INDIAN CHUTNIES

பசிதீபனத் துவையல் வ...

1. புதினா, இஞ்சி, கொத்துமல்லி இலை, கருவேப்பிலை, பச்சை மிளகாய் தக்க பிரமாணம் எடுத்து புளியும் உப்பும் சேர்த்து அரைத்து சாப்பாட்டோடு கூட்டிவந்தால் பித்தஞ் சேரவொட்டாமல் பசியுண்டாக்கும்.

2. இளம் பிரண்டைத்தண்டோடு இஞ்சி, வெள்ளைப்பூண்டு, கருவேப்பிலை, பச்சைமிளகாய் சேர்த்து பசுவின் நெய்யிலாவது நல்லெண்ணெயிலாவது சற்று வதக்கி உப்பும் புளியும் சேர்த்து அரைத்து சாப்பாட்டில் உபயோகித்தால் வாயுவைக் கண்டித்து நல்ல பசியுண்டாக்கும்.

3. உளுத்தம்பருப்பு, இஞ்சி, கருவேப்பிலை, கொத்துமல்லி, பச்சைமிளகாய் இவற்றை நல்லெண்ணெயில் சற்று வறுத்து புளியும் உப்பும் சேர்த்து அரைத்தல்.

மேற்காட்டிய துவையல்களில் புளி மட்டாய்ச் சேர்த்து, எலுமிச்சம்பழச்சாறுஞ் சேர்த்தால் நல்லது.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-௵ மார்ச்சு மீ

1 வெ.	மத்.	17.	14—27	11 தி.	மத்.	22.	15—33	21 வி.	மத்.	26	1—13
2 ச.	„	18.	1—20	12 செ.	„	22	34—46	22 வெ.	„	26.	14—30
3 ஞா.	„	18.	21—35	13 பு.	„	23.	1—22	23 ச.	„	26.	31—46
4 தி.	„	19.	13—30	14 வி.	„	23.	23—39	24 ஞா.	„	26.	47—58
5 செ.	„	20.	1—16	15 வெ.	„	24.	1—14	25 தி.	„	26.	59—75
6 பு.	„	20.	17—34	16 ச.	„	24.	15—33	26 செ.	„	27.	1—14
7 வி.	„	21.	1—17	17 ஞா.	„	24.	34—51	27 பு.	„	27.	15—26
8 வெ.	„	21.	18—32	18 தி.	„	25.	1—13	28 வி.	„	27.	27—44
9 ச.	„	21.	33—46	19 செ.	„	25.	14—30	29 வெ	„	27.	45—56
10 ஞா.	„	22.	1—14	20 பு.	„	25.	31—46	30 ச.	„	27.	57—66
								31 ஞா.	„	28.	1—20

C. L. S. PRESS, MADRAS—1918